**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஆறுமுகனார் தீட்சையின் போது (08 March 2020), அவர் உரைத்த உபதேசம்

மானுட குலம் என்பது ஈசத் துளிகளால் உருவான உத்தம குலமாகும். அறிவு எனும் ஆற்றலினைக் கொண்டே ஈசனை உணர்ந்திட இயலும், ஆராதிக்க இயலும். அன்பினைப் பெருக்கி அருளினை நிறைத்து இன்ப நிலைகளையும் கடந்து பேரானந்த நிலைதனை எய்திட மானுட உடலே உதவிடும். உடல்கள் அற்ற உயர் ஆன்மாக்களும் எய்திட இயலாத அற்புத பேரானந்த நிலை என்பது மானுட அறிவின் மூலம் கிட்டிடும் என்றுணர்க. உணர்வு நிலை ஒன்றே ஈசனையும் உணர்ந்திட உதவிடும். திரைகள் விலகிட தீட்சைகளை ஏற்போர் இவ்வுயரிய கருத்தினையும் ஏற்றிடல் வேண்டும். உபதேசம் என்பதே உணர்வின் அடிப்படையில் மலர்ந்திடும் என்றுணர்க.

ஆறுமுக உபதேசம்
திருவருளை நல்கிடுமாம்

தீட்சை எனும் திருநாமம்
திரைகடலை நீக்கிடுமாம்

தீட்சை எனும் உயர் நாமம்
தீண்டாமை விலக்கிடுமாம்

தீட்சை எனும் பெருநாமம்
தீட்சண்யம் அருளிடுமாம்

தீட்சை எனும் இறைநாமம்
அருளினையே பெருக்கிடுமாம்

தீட்சை எனும் மலர்நாமம்
ஆன்மாவை உயர்திடுமாம்

தீட்சை எனும் மறுநாமம்
கருணையுள்ள ஈசனவர்
கண்மலர்ந்து நோக்கிட்டால்

கருமங்கள் தொலைந்திடுமாம்
காற்றினிலே கரைந்திடுமாம்

ஈசனையே காண்பதற்கும்
இருவிழிகள் வேண்டும்
ஈசனருள் ஏற்பதற்கும்
இருவிழிகள் வேண்டும்

விழிகளிலே ஒளியுண்டு
பார்வை எனும் திறன் உண்டு
புற ஒளியே ஓங்கி நின்றால்
அக ஒளியை அறிவதெங்ஙணம்

அகஒளியே அருள் ஒளியாம்
ஆன்மாவின் பிறப்பொளியாம்
கருவினிலே உதித்த ஒளியாம்
கருமைய விழி ஒளியாம்

கற்பவையும் பயில்பவையும்
கருத்தினிலே நிலைத்துவிட்டால்
கருவான ஆன்மாவும்
மையத்தை விடுத்திடுமாம்

பிறப்புகள் பல கண்டாய்
பதிவுகள் பல கொண்டாய்
பிறவாமை வரம் பெறவே
பிறப்பழிப்பாய் மானுடனே

பதியென்றே நிலைத்திட்டாய்
பத்தினியாய் செயல்புரிந்தாய்
அன்னைக்கும் தந்தைக்கும்
மைந்தன் என்ற உறவுகொண்டாய்

அப்பனாய் உருகொண்டாய்
பிள்ளைகளை ஈன்றிட்டாய்
அரசனாய் உருவேற்று
ஆட்சிகளும் புரிந்திட்டாய்

பிறப்பு எனும் சுழற்சியிலே
பெரும் காலம் கடந்திவிட்டாய்
பூமித்தாய் மடியினிலே
யுகயுகமாய் வாழ்ந்திட்டாய்

பற்றறுப்பாய் மானுடனே
பூமியெனும் கருவறையில்
ஏற்றிட்ட வாழ்வினின்று
பற்றறுப்பாய் மானுடனே

வாழ்வினிலே மோகம் கொண்டு
பிறவிபல கண்டு நின்றாய்
பிறவி பல கொண்டதினால்
உடற்பிணிகள் பல காண்கின்றாய்

பிணிகளே வாழ்வாகி நிலைத்துவிட்டால்
உடலோடு உயிரானதும் வதைபடுமாம்
பிறவாத வாழ்வொன்று கண்டுநின்றால்
உடலோடு உயிரும் இணைந்து விடுபடுமாம்
உணர்வோடு வாழ்ந்திட்டால் உத்தமமே அன்றி
உமதான்மா துன்புறுமாம் என்றுணர்க

சத்தியத்தை உணர்த்துகின்றோம்
நித்தியமும் நிலைத்துவிட
சரணாகதம் புகட்டுகிறோம்
சரணடைவாய் ஈசனிடம்

மானுடர்களே! சாதி என்றும், மதம் என்றும், குலம் என்றும் கோத்திரம் என்றும் பிரிவினைகள் பல கண்டு வாழ்கின்ற நிலை கண்டோம். உயர்வான தெய்வம் எனும் நிலைநின்றே உரைக்கின்றோம். அனைவருள்ளும் உறைகின்ற ஆன்மா எனும் உயிரானது ஈசனின்று உதித்தாகும். எனில் அனைவரும் ஒரு குலத்தினின்று உதித்தவர்களே என்பதனை ஆழமாய் ஏற்றிடுங்கள். இறைவன் ஒருவரே என்கின்ற எண்ணம் உதித்திட்டால் பிரிவினைகள் தோன்றாது.

ஈசத்துளிகளாகிய ஆன்மாக்கள் உடலினைப் படைத்திடும் மூலகாரணமே, மீண்டும் ஈசனைச் சென்று அடைந்திடல் வேண்டும் என்பதாகும். உயிரானது மேற்கொண்டிடும் ஈசப்பயணத்திற்கு உடலானது உறுதுணையாகச் செயல்புரிந்திடல் வேண்டும். உடல் என்பது அணுக்களினால் உருவாக்கப்பட்டது. உயிர் என்பதுவும் அணுக்களினால் உருவாக்கப்பட்டுள்ளது.

உடல் அணுக்களை உயிரானது படைத்திட, உயிரணுவினை ஈசன் எனும் பரம அணு படைக்கின்றது. படைப்பின் மூலம் பரமனை அடைவதே மூலச் செயலாய் அமைந்திடல் வேண்டும். உயிர் படைத்த அணுத் தொகுப்பான உடலே அறிவின் ஆதாரமாகும். அறிவாகிய உடலினைக் கொண்டு இறைநிலைதனை எய்திடல் வேண்டும். அறிவு கொண்ட உடலுக்கே ஆன்ம அனுபவமும் கிட்டிவிடும். உடல் உள்ள தருணம் வரையே உணர்வு நிலைகளும் சித்திக்கும்;.

உயிர் படைத்த உடலினைக் கொண்டு இறையாற்றலை உணர வேண்டும். உணர்தல் ஒன்றே அனுபவநிலை ஆகும், ஆனந்தம் நல்கிடும் நிலையாகும். இறைவனை உணர்தலே பேரானந்த நிலையாகும். உடல் படைத்த மானுட வாழ்வினில் மாத்திரமே உணர்வு நிலைகள் சாத்தியமாகும். அறிவாகிய துணை அணுக்கள் நிலைத்திடும் வரையே பல்வேறு சுரபிகளும் பணியாற்றும். உணர்வு நிலைகளில் பல்வேறு உயரிய நிலைகள் உண்டு. அறிவினைக் கொண்டு இயங்கிடும் காலங்களில் உயரிய உணர்வு நிலைகளையே நாடிச் சென்றிடுங்கள்.

அன்பு என்பது ஓர் உயரிய உணர்வு நிலையாகும். அறிவினைக் கொண்டு சாத்தியமாகும் ஓர் உயரிய நிலை என்பது அன்பு ஒன்றே உணர்ந்திடுங்கள். அன்பு எனும் சொல்லிற்கே அளப்பரிய ஆற்றல் உண்டு. அன்பு என்பது ஓர் ஊற்றாகும். உள் நின்று சுரக்கின்ற ஓர் அமிர்தமே அன்பு எனும் உணர்வினைப் பெருக்கிடும்.

அன்பு எனும் அமிர்தமானது சுரக்கத்துவங்கினால் பேரானந்த நிலை கிட்டிவிடும். அன்பு என்னும் அமிர்த ஆற்றலானது சுரக்க வேண்டுமெனில் அதன் கழிவுகள் நீக்கப்பட்டு, அடைப்புகள் யாவும் விலக்கப்படல் வேண்டும். அன்பு எனும் அமிர்தத்தினைச் சுரக்கும் ஆற்றல் ஆன்மத்துகளுக்கே உண்டு. அறிவினைக் கொண்டே ஆன்மாவின் இயக்கமும் புலப்படும்.

இரு விழிகளிலும் புதையுண்டுள்ள ஆன்மத் துகள்களே அன்பு எனும் அமிர்தம்தனைச் சுரந்திடும் திறவுகோளாகும். கலியுலக மானுடர்கள் அன்பின்றி செயல்புரிவதன் மூல காரணம் என்பது விழிகளின் திரைகளே என்பதனைத் தெளிவாய் உணர்தல் வேண்டும். ஈசனாகிய பரமாத்வினை அடைந்துவிட ஆன்மாவானது விடுவிக்கப்படல் வேண்டும். ஆன்மாவின் விடுதலையோ ஆன்மத் துகள்களின் விடுதலையைச் சார்ந்துள்ளது. ஆன்மத் துகள்களின் விடுதலையோ ஏழு திரைகளைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு ஆன்மத் துகளினையும் ஏழு திரைகள் அமிலப் படிமன்களாய் உருமாறி சிறை கொண்டுள்ளன.

அனைத்திற்கும் மூலாதாரமாய் விளங்குவதோ விழித்திரைகளேயாகும். கலியுலக மானுடர்களால் ஒவ்வொரு ஆன்மத் துகளினையும் உணர்ந்து விடுவித்திட இயலாத வண்ணம் சிரசினிலே கழிவுகள் பெருகியுள்ளன. அதன் பொருட்டே மூலத்தினை உணர்ந்து விடுவித்திட மார்க்கம் அளிக்கப்படுகின்றன.

தீட்சைகளை ஏற்பதன் மூலம் ஒவ்வொரு திரைகளும் உருகிக் கரைந்திடும். விழித்துகளும் விடுதலையுறும். ஒரு துகள் விடுபட்டால் மார்க்கம் உணர்ந்து அனைத்துத் துகள்களுமே விடுபடும். திரைகள் நீங்கினால் விழித்துகளானது வலம்வரத் துவங்கிடும். ஆன்மாவினையும், உயர் தெய்வங்களையும் விடுபட்ட விழித்துகளானது தரிசித்திடும். மேலும் அமிர்தம் எனும் திரவமும் சுரக்கத் துவங்கிவிடும்.

ஆன்மத் துகளாகிய பாதரசத்துகளே அமிர்தம் சுரக்கும் களஞ்சியமாகும். விழித்துகள் என்பதே ஆன்மாவினை விடுவித்திட உதவிடும். ஒரு ஆன்மத் துகளினின்று சுரந்திடும் அமிர்தமே அன்பு எனில், முழுமையான ஆன்மாவினின்று சுரப்பதே பேரானந்தம் நல்கிடும் கருணையாகும். ஊற்றெனச் சுரக்கும் கருணை எனும் அமிர்தம் ஒன்றே மானுட குலத்தினைக் காத்திட அருளிடும். கலியின் எல்லையிலே ஆன்மாவினை உணர்ந்திட இயலாது. செயல்படும் மானுடர்களே அழிவுகளுக்கும் காரணமாய் அமைகின்றார்.

விழிகளின் திரைகள் விலகினால் ஆன்மத் துகளானது விடுபடும். ஒரு துகள் விடுபட்டால் பற்பல துகள்களின் விடுதலைக்கும் உதவிடும். அதன் மூலம் அன்பு நிலை பெருகிடும். சத்ய யுகமும் மலர்ந்திடும். விடுபட்ட ஆன்மத் துகள்களிலிருந்து சுரப்பதே கருணை என்றும் காருண்யம் என்றும்

அழைக்கப்படும் அமிர்தம் ஆகும். அமிர்தமே அன்பாய் வெளிப்படும் என்றுணர்க. ஒரு ஆன்மாவினின்று அன்பு சுரந்திட்டால் சூழ்கின்ற பல ஆன்மாக்களும் விடுபட உதவிடும் எனில் ஞானத்தின் ஆயலத்தினிலே விடுவிக்கப்படும் ஒவ்வொரு ஆன்மத்துகளும் எத்தகைய வீரியம் வாய்ந்த அன்பு எனும் அமிர்த ஆற்றலைச் சுரந்திடும் என்பதனைத் தெளிவுற உணர்தல் வேண்டும்.

ஆன்மத் துகள்கள் விடுபட இயலவில்லை எனில் குருதியானது இறுகத் துவங்கிவிடும். திரைகளும் வலுக்கக் துவங்கிடும். அதன் மூலம் நஞ்சாற்றலாகிய அமிலம் என்பது அதிக அளவினில் வெளிப்படும். அதன் மூலம் அன்பின்மை பெருகிடும். ஆணவம் ஓங்கிடும். அகந்தை பெருகி நின்றால் கூடி வாழ்கின்ற உயிர்களையும் உணர்ந்துவிட இயலாது.

அன்பற்ற நிலையில் அமிலக் கழிவுகள் கூடிவிடும் என்றும் அதன் மூலம் அன்பற்ற தீய செயல்கள் பெருகிடும் என்றுமே உணர்ந்திடுக. கலிமானுட சமுதாயம் தெளிவுற வேண்டுமெனில் அடிப்படைத் தத்துவத்தினை உணர்ந்துவிட வேண்டும். தீய உணர்வுகளை ஏற்பதினால் குருதியானது கடினமுறுகின்றது, அதன் மூலம் அமிலக் கழிவுகளே பெருகுகின்றது. அவை யாவும் திரைகளாய் உருமாறுகின்றன. அன்பு எனும் அமிர்தம் சுரப்பதனையும் தடை செய்கின்றன. மேலும், ஆணவம் பெருகிடவும் வழிவகை புரிகின்றன.

இதன் மூலமே யுக மாற்றமும் நிகழ்ந்தேறுகின்றது. மானுடர்களின் செயல்பாடுகளின் மூலம் எந்த ஒரு ஆற்றலும் பரவிடாத யுகமே சத்யயுகமாகும். அன்பு பெருகி நிலைப்பதே திரேதாயுகமாகும். கழிவுகள் உதித்து, அதன் மூலம் திரைகள் உருவாகி, அன்பு தடைபடுவதே துவாபர யுகமாகும்.

திரைகள் யாவும் வலுவுற்று, அன்பு என்பது மறைந்தொழிந்து, ஆணவமே ஓங்கி நின்றால் கலியுகம் நிலைக்கின்றது என்றே பொருள்படும். ஆணவமாகியக் கழிவுகள் வெளியேறி பிற ஆன்மாக்களையும் சூழ்ந்திட்டால் எல்லைக் காலம் உதித்திடும். கலியின் எல்லைக் காலமே இத்தருணம் நிலவுகின்றது. ஆணவம் பெருகி, அன்பு மறைந்து, மானுட குலம் அழிவினை நோக்கியே பயணிக்கின்றது.

இறைவன் ஒருவரே என்பதனை உணர்ந்திட வேண்டுமெனில், திரைகள் விலகிட வேண்டும். அன்பு மலர்ந்திட வேண்டும். அன்பு எனும் மலரானது மலரத் துவங்கினால் மணம் பரவத் துவங்கிடும். மலர்களின் மகரந்தம் பரவுவது

போன்று அன்பு எனும் அமிர்த ஆற்றலும் ஒரு மானுடனிடமிருந்து மற்ற ஒரு மானுடனுக்கு எளிதாய்ப் பரவிடும் அன்பு பரவினால் மாத்திரமே உலகம் உய்வுறும்.

உடற்பிணிகள் நீங்கிடவும் அன்பு உதவிடும். மானுட குலம் பிணைப்புறவும் அன்பு உதவிடும். இறைவன் ஒருவனே எனும் உயர்ந்த நிலையினை அன்பின் மூலமே உணர்ந்திட இயலும், அன்பின் மூலமே பிறர் அறிந்திடவும் உதவிட இயலும். சத்யயுகம் மலர்ந்திட அன்பு பெருகிடல் வேண்டும். ஆன்மாக்கள் விடுதலை அடைந்தால் அன்பு என்பது ஊற்றாகிப் பெருகிடும். எங்கும் அன்புநிலை பரவினால் யுகமானது மாற்றமுறும், ஈசனும் மகிழ்ந்திடுவார்.

அனைத்திற்கும் மூலமாய் விளங்கிடும் திரைகளை நீக்கி, தீட்சைகளைப் பெற்று, குருவின் திருவருளால் ஆன்மாவினை விடுவித்து யுகமாற்றம் நிகழ்ந்தேறிட உதவிடல் வேண்டும். அகத்திய மகான் ஏற்றே நிகழ்ந்திடும் இம்மாபெரும் யுத்தத்தில் பங்கு கொண்டு, செயற்கையை அழித்து இயற்கையை பெருக்கி, ஆணவத்தினை அழித்து அன்பினைப் பெருக்கி மதங்களை அழித்து மன ஒற்றுமையைப் பெருக்கி ஆன்மாக்களை விடுவித்து ஈச ஆற்றலைப் பெருக்கி சத்ய யுகமானது தீர்க்கமாய் மலர்ந்திட உதவிடல் வேண்டும்.

உறுதுணையாய் செயல்புரியும் உயர் ஆன்மாக்களை ஏற்றுப் பணிந்து, குருவின் துணை கொண்டு கலியுகத்தினைக் கடந்துவிட்டால் மிகவும் உயரிய சத்யயுக வாழ்வானது உங்களை வரவேற்றிடும். உணர்தல் ஒன்றே உத்தம நிலைகளைப் பெருக்கிடும். ஈசனை உணர்தல் ஒன்றே ஆன்ம ஆற்றலை உயர்த்திடும்.

உணர்ந்து செயல்புரியக்கடவது.

**வாழ்த்துகின்றோம்.**

Gnanalayam